12.12.2023

*OS 26/2019*
**பி.வா.சா.3 ஆண்டிச்சாமி**
**குறுக்கு விசாரணை:**

நான் ஆலம்பட்டியில் இருந்து வருகிறேன். நான் எப்போதும் கையெழுத்து போடுவேன். தற்போது எனக்கு கை ஆடுவதால் கையெழுத்து போடுவதில்லை, ரேகை வைக்கிறேன். என்னிடம் காட்டப்படும் நிருபணவாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். எனக்கு ஞாபகசக்தி நன்றாக உள்ளதா என்றால் பாதி உள்ளது, பாதி இல்லை. நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. அவர்கள்தான் அழைத்து வந்தார்கள். எனக்கு 80வயதாகிறது. முத்துகருப்பன் எனக்கு நண்பரா என்றால் நண்பர்தான். முத்துகருப்பனுக்கு 3ஆண்பிள்ளைகள், 2 பெண்மக்கள். முத்துகருப்பன் உயிலில் கையெழுத்து செய்யும்போது நான் நேரடியாக பார்த்தேன் என்று என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல மற்றொரு சாட்சியும் கையெழுத்து செய்யும்போது நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல, பார்த்தேன். ஆனால் அவர் எந்த ஊர் என்று தெரியவில்லை. சாட்சி கையெழுத்து போடும்போது நான் பார்த்தேன் என்று என்னுடைய நிருபணவாக்கு மூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி பார்த்ததாக சொல்கிறார். இந்த உயிலை யார்யார் பெயரில் எழுதி வைக்க வேண்டும் என்று என்னை அழைத்து சென்றார் என்றால் பூமிராஜிக்கும், ஆசைதம்பிக்கும் எழுதி வைக்க வேண்டும் என்று சொன்னார். இந்த உயிலில் எத்தனை இலக்க சொத்துக்கள் உள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது. அந்த சொத்துக்கள் பொதுகுடும்ப சொத்தா அல்லது பூர்வீக சொத்தா என்றால் குடும்ப சொத்து. மேற்படி உயிலில் பிற நபர்களுக்கு சொத்துக்களை ஏன் எழுதி வைக்கவில்லை என்று சொல்லியுள்ளரா என்றால் எனக்குத் தெரியாது. உயில் எழுதி 13 வருடமாகிறது. தேதி ஞாபகமில்லை. கருங்காலக்குடி பத்திர அலுவலகத்தில் வைத்து உயில் எழுதப்பட்டது. முத்துகருப்பன் இதற்கு முன்பாக எத்தனை உயிலை எழுதி வைத்துள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. முத்துகருப்பன் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 50 அடி இருக்கும். முத்துகருப்பன் மற்றும் அவரது குடும்பத்தை சார்ந்தவர்கள் ஒரே வீட்டில்தான் வசித்து வந்தார்கள் என்றால் திருமணத்திற்கு முன்பு வரை ஒன்றாக இருந்தார்கள்.

திருமணத்திற்கு பின்னிட்டு தனித்தனியாக சென்றுவிட்டார்கள். பூமிராஜியும், ஆசைதம்பியும் உயில் எழுதும்போது வந்தார்களா என்றால் இல்லை, நானும், முத்துகருப்பன் மட்டும்தான் சென்றோம். அப்போது இருவரும் நன்றாகத்தான் இருந்தோம்.

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்.